6 நவம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 32ஆம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**உலக இளையோர் தினம் (நவம்பர் 20)**



# உயிர்த்தெழுதலைப் பற்றிய எதிர்நோக்கு

அ பெரும்பான்மையான நேரங்களில் நாம் கிறிஸ்துவின் போதனைக்கு எதிராக நடந்துகொண்டிருக்கிறோம். இந்தப் போக்கு, நாம் அவரை குறைவாக அன்பு செய்வதால் அல்ல; மாறாக நாம் நம்மையும் உலகத்தையும் அதிகமாக அன்புசெய்வதால் தான். ஒருவேளை நம்மை வெளியிலிருந்து அழுத்தும் குடும்பச் சுமைகள், மன அழுத்தங்கள், அதிகாரம், சமூகம் ஆகியவற்றால் இவ்வாறு நாம் நடந்துகொள்கிறோமா அல்லது நம் நம்பிக்கை போதுமான அளவுக்கு வலுவற்று இருக்கிறதா?

---

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே; என்னிடம் நம்பிக்கைக் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.

(யோவான்: 11:25)

இன்றைய முதல்வாசகத்தில், சகோதரர்களும் அவர்களின் தாயும் அவர்களுக்கென்று வகுத்திருந்த சட்டத்தை மீறுவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தபட்டார்கள். அவ்வாறு நடந்து கொள்ளவில்லையென்றால், மரணம் அவர்களுக்குக் காத்திருக்கிறது. இருந்தபோதும், இறுதியில் கடவுள் தரும் விண்ணகவாழ்வு அவர்களுக்கு காத்திருக்கிறதென்று உறுதியான நம்பிக்கைக் கொண்டதால், தங்களைக் கொல்லத் தயாராய் இருந்தவர்களிடம் கையளித்துத் துணிவோடு சாவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் நிச்சயமாக உயிர்த்தெழுவர் ஆனால் அவர்களின் எதிரிகளுக்கு அது கிடைக்காது. சோதனை என்பது ஏதோன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளின் காலத்திலிருந்தே முதல் சோதனையின் போதே தொடங்கி, எந்த மாற்றமுமில்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டு தானிருக்கிறது. ஒவ்வொருநாளும், கடவுளோடு நாம் கொண்டுள்ள நம்பிக்கையைக் குலைக்கும் விதமாக நமக்குச் சோதனைகள் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த சகோதரர்களைப் போலவும் அவர்களுடைய தாயைப் போலவும், நாம் உறுதியான நம்பிக்கைக் கொண்டுள்ளோமா? முதலில் நாம் ஏன் கடவுளின் மீது நம்பிக்கைக் கொள்ளவேண்டும்? நாம் பலவீனர்களாகவே இருந்தாலும், தொடர்ந்து நாம் அவர்மீது நம்பிக்கைக் கொள்ள எடுக்கும் அத்தனை முயற்சிகளும் பலனளிக்காமல் போகாது.

நம் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். இரண்டாம் வாசகத்தில் கூறுவதுபோல, நல்லதையே சொல்லவும், செய்யவும் ஆண்டவர் நம்மை ஊக்கப்படுத்துவார். கடவுள் நமக்கு மன உறுதியைத் தந்து தீயோனிடமிருந்து நம்மைக் காப்பாராக. இறைவார்த்தையை தூதுரைக்கும் அனைவருக்காகவும் மன்றாடுமாறு நாமும் ஊக்குவிக்கப்படுகிறோம்.

பெரும்பாலும் வயதானவர்கள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு உரையாடும்போது, இறந்தபின் விண்ணகத்தில் மீண்டும் சந்திக்கலாம் என்று விளையாட்டாகச் சொல்வதுண்டு. இருந்தபோதும், மண்ணுலகில் நாம் வாழ்ந்த வாழ்வைப் போல விண்ணகத்தில் நாம் வாழமுடியாது என்று கிறிஸ்து நமக்கு கற்பிக்கிறார். இன்றைய நற்செய்தியில் சதுசேயர்கள் இயேசுவிடம் ஒரு தந்திரமான கேள்வியைக் கேட்டார்கள். ஏழு சகோதரர்களை மணம் புரிந்த பெண், இறந்து விண்ணகத்துக்குச் சென்றபின் அவளின் திருமண நிலை என்னவென்று கேட்கின்றார்கள். பூமியில் இருப்பதுபோன்ற நிலை விண்ணகத்தில் இல்லை என்று இயேசு தெளிவாகப் பதிலளித்தார். **நாம் உயிர்த்தெழுந்தபின் இனிமேல் நாம் இந்த உலகின் பிள்ளைகள் அல்ல; மாறாக கடவுளின் பிள்ளைகள்.** விண்ணகப்பிள்ளைகளாக இருக்கும் நாம் வானதூதர்களைப் போல இருப்போம். மரணத்திலிருந்து இறைவன் நம்மை உயிர்ப்பித்ததால் நாம் நிலைவாழ்வைப் பெற்றுள்ளோம். கிறிஸ்து நமக்கு வழங்கியப் போதனையில் இருந்து நாம் பெற்ற மீட்பின் வாக்குறுதி தான் இந்த நிலைவாழ்வு.

**இன்றைய வாசகங்கள்:**

2 மக்கபேயர்: 7: 1-2,9-14;

திருப்பாடல்: 17: 1,5-6, 8,15;

2 தெசலோனிக்கர்: 2: 16-3:5;

லூக்கா: 20: 27-38 (அ) 27: 34-38.

INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org